தென்காசி நகராட்சி

# 08.04.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் பொருள் மற்றும் தீர்மானம்

**மன்றகூட்டப்பொருள்.1**

01.04.2022 முதல் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அமல்படுத்தவேண்டிய சொத்துவரி பொதுசீராய்வு தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண் 52, நாள்.30.03.2022 யை மன்றத்தின் பார்வைக்கும்,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் பதிவுசெய்யலாம்

ந.க.எண்.632/2022/அ1

**மன்றகூட்டப்பொருள்.2**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15—ஆவது மத்திய நிதி ஆணையம், 2022—2023—ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019—ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல்

உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |

| | |
|---|---|
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் தென்காசி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ.எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 2.24 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.63 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 4.25 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 2.87 |
| | **மொத்தம்** | **9.99** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், தென்காசி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

அ.கு:-மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.632/2022/அ1

**<u>மன்றகூட்டப்பொருள்.3</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண் 52, நாள்.30.03.2022ல் அறிவுறுத்தப்பட்டபடி 01.04.2022 முதல் இந்நகராட்சியில் அமல்படுத்தவேண்டிய சொத்துவரி பொதுசீராய்வு நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளும் வகைக்கான உத்தேச செலவீனம் ரூ3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-

மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.632/2022/அ1

**<u>மன்றப்பொருள்.4</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தில் டிஜிட்டல் முறையில் விளம்பரம் செய்யும் குத்தகை உரிமத்திற்கு , ஏற்கனவே நடைபெற்ற 21.01.2021, 16.02.2021,

25.02.2021, 18.05.2021, 10.06.2021, 09.07.2021, 19.08.2021, 06.09.2021, 16.09.2021, 22.10.2021, 11.11.2021, 25.11.2021, 23.12.2021, 30.12.2021,20.01.2022, 09.03.2022ல் ஆகிய தேதிகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத்தொகை செலுத்தி எவரும் பொது ஏலம் கேட்க முன்வரவில்லை.

தற்சமயம் 24.03.2022ல் நடைபெற்ற பொது ஏலத்தில் புதிய பேருந்துநிலையத்தில் டிஜிட்டல் முறையில் விளம்பரம செய்யும் குத்தகை உரிமத்திற்கு 2 நபர்கள் கீழ்க்கண்ட விபரப்படி ஏலம் கேட்டுள்ளார்கள்.

| வ.எண் | பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | சத்ய ஈஸ்வரன்,<br>327,மங்கம்மாள் சாலை,<br>ஆய்க்குடி | ரூ.1,91,000/– |
| 2. | K,இசை தேவா,<br>மங்கம்மாள் சாலை,<br>தென்காசி. | ரூ.1,92,000/– |

புதிய பேருந்துநிலையத்தில் டிஜிட்டல் முறையில் விளம்பரம் செய்யும் குத்தகை உரிமத்திற்கு ஒரெயொரு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்ற விபரம்.

| வ.எண் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | பெ. சிவபிரசாத்,<br>த/பெ பெரியசாமி,<br>25/2, வ.உ.சி.நகர் 6வது தெரு,கோவில் பட்டி. | ரூ.2,10,000/– |

மேற்கண்ட வரபெற்ற ஒப்பந்தபுள்ளிதாரர் திரு.பெ.சிவபிரசாத் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/– ஆனது பொது ஏலத்தில் வரிசை எண்.2ல் கேட்டுள்ள ஏலத்தொகை ரூ.1,92,000/– ஐ விட ரூ.18000/– கூடுதலாகவும், 2020–21 குத்தகை உரிமத்தொகை ரூ 1,81,913/– ஐ விட ரூ.28,087/–கூடுதலாக உள்ளது.

எனவே கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ள திரு.பெ.சிவபிரசாத் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/– ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

1.ஒப்பந்தபுள்ளிதாரர் திரு.பெ.சிவபிரசாத் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,10,000/– ஆனது பொது ஏலத்தில் வரிசை எண்.2ல் கேட்டுள்ள ஏலத்தொகை 1,92,000/– ஐ விட ரூ.18,000/– ரூ.கூடுதலாகவும், 2020–21 குத்தகை உரிமத்தொகை ரூ 1,81,913/– யை ரூ.28,087/–விட கூடுதலாக இருப்பதால் மன்றம் அனுமதிக்ககலாம்.

2.அவசர அவசியம் கருதி முன்அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2520/2020/அ2

**மன்றப்பொருள்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு, ஏற்கனவே நடைபெற்ற 21.01.2021, 16.02.2021, 25.02.2021, 18.05.2021, 10.06.2021, 09.07.2021, 19.08.2021, 06.09.2021, 16.09.2021, 22.10.2021, 11.11.2021, 25.11.2021, 23.12.2021, 30.12.2021,20.01.2022, 09.03.2022ல் ஆகிய தேதிகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத்தொகை செலுத்தி எவரும் பொது ஏலம் கேட்க முன்வரவில்லை.

தற்சமயம் 24.03.2022ல் நடைபெற்ற புதிய பேருந்துநிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு, பொது ஏலத்தில் வைப்புத்தொகை,காப்புத்தொகை செலுத்தி ஒருவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை.

மேற்கண்ட குத்தகை உரிம இனத்திற்கு மூன்று ஒப்பந்த புள்ளிகள் வரபெற்றது.

| வ.எண் | பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | I.ஷேக்அலி,<br>47/1,தெற்கு கடையத்தெரு,<br>தென்காசி. | ரூ,8,55,555/– |
| 2. | M.யாசர் அரபாத்,<br>360, தெரு,<br>தென்காசி. | ரூ,7,31,500/– |
| 3. | N.ராம்துரை,<br>த/பெ நடராஜன்,<br>83, செண்பக விநாயகர் கோவில் தெரு,<br>தென்காசி. | ரூ,9,62,000/– |

மேற்கண்ட ஒப்பந்த புள்ளியில் ஒப்பந்தபுள்ளிதாரார் திரு. N.ராம்துரை கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி தொயையானது வரிசை எண்.1 ஐ காட்டிலும் ரூ.1,06,445/–கூடுதலாகவும், 2020–21 குத்தகை உரிமத்தொகை ரூ.13,38,215/– ஐ விட ரூ.376215/– குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1275502/– ஐ விட ரூ.313502/– குறைவாகவும் உள்ளது.

மேலும் இந்நகராட்சியால் அலுவலக பணியாளர்களால் நாளது தேதி வரை நாள் ஒன்றிற்கு ரூ. 2400/– வீதம் வருடத்திற்கு ரூ.8,75,000/– வசூல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே இந்நகராட்சி அலுவலக பணியாளரால் வசூல் செய்யப்பட்ட தொகை வருடம் ஒன்றிக்கு ரு.8,75,000/– விட ரூ,ரூ.87,000/– கூடுதலாக உள்ளதாலும், மேற்படி மூன்று அலுவலக பணியாளரைக்கொண்டு வசூல் செய்ய சுமார் ரு.2,00,000/– லட்சம் செலவாகிறது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதிஇழப்பினை கருத்தில் கொண்டு பொது ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தபுள்ளிதாரர் திரு. N.ராம்துரை, என்பவரின் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,62,000/– ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

1. இந்நகராட்சி அலுவலக பணியாளரால் வசூல் செய்யப்பட்ட தொகை வருடம் ஒன்றிக்கு ரு.8,75,000/– விட ரூ.87,000/– கூடுதலாக உள்ளதாலும், மேற்படி மூன்று அலுவலக பணியாளரைக்கொண்டு வசூல் செய்ய சுமார் ரு.2,00,000/– லட்சம் செலவாகிறது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதிஇழப்பினை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தபுள்ளிதாரர் திரு. N.ராம்துரை, என்பவரின் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,62,000/– ஐ ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்ககலாம்.
2. அவசர அவசியம் கருதி முன்அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>2520/2020/அ2</u>

<u>மன்றப்பொருள்.6</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்துநிலையத்தில் உள்ள கடை எண்.3 ஐ மாத வாடகை அடிப்படையில் அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு, 24.03.2022ல் நடைபெற்ற பொது ஏலத்தில் வைப்புத்தொகை, காப்புத்தொகை செலுத்தி எவரும் பொது ஏலம் கேட்க முன்வரவில்லை.

மேற்கண்ட பழைய பேருந்துநிலையத்தில் உள்ள கடை எண்.3 ஐ மாத வாடகை அடிப்படையில் அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு, இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | ஏம்.பீர்முகம்மது,<br>360,எஸ்.கே.பி.தெரு,தென்காசி. | ரூ.15,900/– |
| 2. | மாடசாமி.வி,<br>360/1,உச்சிமாகாளி 1ம் தெரு,கீழப்புலியூர். | ரூ.15,100/– |

மேற்கண்ட கடை எண்,3 க்கு மாத வாடகைக்கு வரப்பெற்ற ஒப்பந்த புள்ளியில் ஒப்பந்தபுள்ளிதாரர் திரு. ஏம்.பீர்முகம்மது கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி தொயையானது வரிசை எண்.2 ஐ காட்டிலும் ரூ900/–.கூடுதலாகவும், 2020–21 ம் ஆண்டு மாத வாடகை தொகை ரூ12000/– ஐ விட ரூ.3900/– கூடுதலாகவும் இருப்பதால் , திரு.எம்.பீர்முகம்மது என்பவர்

கொடுத்துள்ள.உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

அலுவலக்குறிப்பு

1. ஒப்பந்தபுள்ளிதாரர் திரு.ஏம்.பீர்முகம்மது கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி தொயையானது வரிசை எண்.2 ஐ காட்டிலும் ரூ900/–.கூடுதலாகவும், 2020–21 ம் ஆண்டு மாத வாடகை தொகை ரூ12,000/– ஐ விட ரூ.3900/– கூடுதலாகவும் இருப்பதால் , திரு.எம்.பீர்முகம்மது என்பவர் கொடுத்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் முன்அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2520/2020/அ2

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 21 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 22 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 23 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 24 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 25 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 26 | அ.கு.<br><br>மன்றப்பொருள் 22க்கு ஆதரவு தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்கள் 22 நபர்கள். 7 நகர்மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். 1)திருமதி.பொன்னம்மாள் வார்டு.8 2).திரு.சங்கரசுப்பிரமணியன் வார்டு 15, 3).திருமதி.சுனிதா வார்டு.23, 4).திரு.லட்சுமணபெருமாள் வார்டு.30 .5) .திரு.உமா மகேஸ்வரி வார்டு.2. 6.) திருமதி.ராமசுமதி, வார்டு.4 7)திரு.குருசாமி வார்டு.28<br><br>பெரும்பான்மையான உறுப்பினர்கள்ஆதரவு தெரிவித்ததால் தென்காசி நகராட்சியில் 01.04.2022 முதல் அரையாண்டு முதல் அரசாணை ( நிலை) எண்.52.நாள்.30.03.2022ன் படி பொத சொத்துவரி ( காலிமனை) சீராய்வு செய்ய மன்றம் தீர்மானிக்கப்பட்டது. |

நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்

தென்காசி நகராட்சி

28.04.2022 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் பொருள் மற்றும் தீர்மானம்

**<u>மன்றப்பொருள் : 1</u>**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண் 21, கதவுஎண் 36,மட்டப்பா தெரு என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தின் வரிவிதிப்பு எண் 145/27089 க்கு 1993–1994 ம் ஆண்டு நடைபெற்ற சொத்துவரி பொதுச்சீராய்வின் போது வரி உயர்வு செய்யப்பட்டதை எதிர்த்து இந்நகராட்சிக்கு எதிராக தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.வைத்தியநாதன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கானது (வழக்கு எண் ஒ.எஸ்.எண்.104/2022 முடிவுற்று தீர்ப்பின் அடிப்படையில் சொத்துவரி கேட்பானது கணிணியில் பதிவேற்றம் செய்து மேற்படியாருக்கு 1993–1994ம் ஆண்டு முதல் சொத்துவரி நிலுவை மற்றும் நடப்பு தொகை செலுத்தக்கோரி அறிவிப்பு அனுப்பிய நிலையில் மேற்கண்ட வரிவிதிப்பாளரால் 2009–2010 ம் ஆண்டு முதல் 2021–2022ம் ஆண்டு வரையுள்ள காலகட்டங்களுக்கு சொத்துவரி தொகைக்குரிய வங்கி வரைவோலையினை அனுப்பி 1993–1994ம் ஆண்டு முதல் 2008–2009ம் ஆண்டு வரையுள்ள காலகட்டங்களில் உள்ள சொத்துவரி நிலுவையினை காலங்கடந்த வரியினமாக கருதி நீக்கம் செய்யுமாறு கோரப்பட்டது.ஆனால் அவ்வாறு செய்ய இயலாத நிலையில் வரப்பெற்ற வங்கிவரைவோலைக்குரிய தொகையினை 1994–1995ம் ஆண்டிலிருந்து 2008–2009ம் ஆண்டு வரை வரவு வைக்கப்பட்டு 2009–2010ம்ஆண்டு முதல்2021–2022ம் ஆண்டு வரை சொத்துவரி நிலுவைத்தொகையினை செலுத்துமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்து மேற்படி வரிவிதிப்பாளரின் மனைவி திருமதி.பொன்னம்மாள் என்பவரால் மீண்டும் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் 104/2022க்கு இந்நகர் மன்ற வழக்கறிஞர் திரு.ஏ.வி.புகழேந்தி அவர்களை இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகவும், மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு.</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட வழக்கிற்கான செலவு தொகையினை நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.25/2017/அ1

## மன்றப்பொருள் : 2

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கு மற்றும் மத்தளம் பாறை உரக்கிடங்குகளில் அடிக்கடி தீ பிடித்து எரிந்து விடுகிறது. தீயணைப்புத் துறையின் உதவியோடு தீயை அணைப்பதற்கு எரிந்த குப்பைகளை ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு அமர்த்தி சமப்படுத்தப் பட்டு வருகிறது. மேலும் தென்காசி தற்போது மாவட்ட தலைநகரமாக இருப்பதால் அதிக அளவிலான அரசு சார்ந்த அலுவலகங்கள், விரிவாக்ககப் பகுதிகள் உருவாகி வருதாலும், வாறுகால் மற்றும் புதர்களை அகற்ற வேண்டியுள்ளது.

தற்போது ஜே.சி.பி. இயந்திரம் இல்லாத காரணத்தினால் ஓராண்டு காலத்திற்கு ஜே.சி.பி. இயந்திரத்தினை ஒப்பந்தம் மூலம் வாடகைக்கு அமர்த்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9.50 (இலட்சம்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | ஜே.சி.பி. இயந்திரத்தினை ஒப்பந்தம் மூலம் ஒராண்டிற்கு வாடகைக்கு அமர்த்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 726/2022/எச்1

## மன்றப்பொருள் : 3

தென்காசி நகராட்சியில் பணி புரியும் துாய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான கையுறை, காலுறை, தொப்பி, முகயுறை, மிளரும் சட்டை மற்றும் குப்பைகளை பிரித்து வாங்குவதற்கு பச்சை வண்ணம் டப்பா மற்றம் நீல வண்ண டப்பா ஆகியவைகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் துாய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 725/2022/எச்1

## மன்றப்பொருள் : 4

தென்காசி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பேட்டரி மூலம் இயக்கும் 36 வாகனங்களில் தற்போது 15 வாகனங்கள் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் உள்ளது. 21 வாகனங்கள் நல்ல நிலையில் உள்ளது. 15 வாகனங்கள் பழுதாகி உள்ளதால் முதல்நிலை சேகரிப்பு செய்வதற்கு சிரரமாக உள்ளது.

எனவே பழுதாகி உள்ள 15 எண்ணம் பேட்டரி மூலம் இயக்கும் வாகனங்களை பழுது நீக்கம் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி பேட்டரி மூலம் இயக்கும் வாகனம் 15 எண்ணத்தினை பழுது நீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்.463 /2022/எச்1

## <u>மன்றப்பொருள் : 5</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள இலகுரக வாகனம் மற்றும் கனரக வாகனம் இயக்குவதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.14நாள்.17.03.2022ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி 22.04.2022ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | இலகுரக வாகனம் ஒப்பந்தப் புள்ளித் தொகை நாள் ஒன்றுக்கு ரூ. | கனரக வாகனம் ஒப்பந்தப் புள்ளித் தொகை நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.சுடலைக்கனி, 2/273, முப்புடாதியம்மன் கோவில் தெரு, பாட்டப்பத்து, ஆயிரப்பேரி. | ரூ.660/— | ரூ.707/— |
| 2 | திரு. தங்கத் துரை 23, பள்ளிக்கூடத் தெரு, நன்னகரம். | ரூ.670/— | ரூ715/— |

அ.கு. 1. மேற்படி பணிக்கு வரிசை எண். 1ல் கண்டுள்ள ஆயிரப்பேரி 2/273, முப்புடாதியம்மன் கோயில் தெரு, திரு.எம்.சுடலைக்கனி என்பவரின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. திரு.எம்.சுடலைக்கனி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்படும் நாளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு வழங்கவும், ஒவ்வொரு ஆண்டிற்கும் ஊதியம் பொதுப்பணித்துறையின் மூலம் இலகுரக ஓட்டுநர் மற்றும் கனரக ஓட்டுநர்களுக்கு என நிர்ணயம் செய்யப்பட்ட(SCHEDULE OF RATE) ஊதிய விகிதத்தின் படி ஊதியம் வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.462/2022/எச்1

## <u>மன்றப்பொருள் : 6</u>

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2020 – 21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 1115 நாள் 25.01.2022ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| | **முதல் தவணை** | | | |
| 1 | மாதாபுரம் நீரூந்து நிலையத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 | திரு I.ஷேக் முகைதீன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.70% கூடுதல்<br>8.18% கூடுதல் |
| 2 | திருமலையப்பபும் நீரூந்து நிலையத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.00 | திரு I.ஷேக் முகைதீன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.71% கூடுதல்<br>7.31% கூடுதல் |
| | **இரண்டாவது தவணை** | | | |
| 3 | ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 10.00 | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 4.51% கூடுதல்<br>6.01% கூடுதல் |
| 4 | மன்னார்கோவில் நீரூந்து நிலையத்தில் சுற்றுச் சுவர் அமைத்தல் | 10.00 | திரு S.பிச்சைககனி ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 4.68% கூடுதல்<br>5.97% கூடுதல் |
| 5 | கீழப்புலியூர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் பொருத்தி, தாழ்வாக உள்ள சுற்றுசுவரில் இரும்பிலானதடுப்பு பொருத்துதல் | 10.00 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.73% கூடுதல்<br>7.75% கூடுதல் |
| 6 | அண்ணாநகரில் உள்ள MCCயில் Rag Bailing Machine சப்ளை செய்து பொருத்துதல் | 6.00 | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர்<br>திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 0.50% குறைவு<br>0.33% கூடுதல் |
| 7 | ஆய்க்குடி ரோட்டில் உள்ள MCCயில் Rag Bailing Machine சப்ளை செய்து பொருத்துதல் | 6.00 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.50% குறைவு<br>0.33% கூடுதல் |

அ.கு 1. மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1 முதல் 5 வரையுள்ள பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்

2 மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 6 மற்றும் 7ல் கண்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் : 7</u>**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2020 – 21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக

அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 26/2021/ஆ1 நாள் 29.12.2021ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள்பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| | **முதல்தவணை** | | | |
| 1 | ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் 160KVA ஜெனரேட்டர் சப்ளை செய்து பொருத்துதல் | 15.00 | திரு M.சின்னதம்பி ஒப்பந்தக்காரர்<br>திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 4.70% கூடுதல்<br>6.50% கூடுதல் |
| 2 | ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் Infiltration Well அமைத்தல் | 15.00 | திரு I.ஷேக் முகைதீன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.76% கூடுதல்<br>6.50% கூடுதல் |
| 3 | மங்கம்மாள் சாலை – வள்ளிநகரில் மழைநீர் வடிகால்அமைத்தல் | 20.00 | திரு S.பிச்சைக்கனி ஒப்பந்தக்காரர்<br>திரு M.சின்னதம்பி ஒப்பந்தக்காரர் | 4.69% கூடுதல்<br>7.25% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்

**<u>மன்றப்பொருள் : 8</u>**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2021– 22ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 26/2021/ஆ1 நாள் 11.03.2022ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மங்கம்மாள் சாலை வள்ளி நகரில் தார் தளம் அமைத்தல் (145002R189, 145002R190 & 145002R191) | 18.00 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 3.88% கூடுதல்<br>6.97% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் 3.88% கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள திருC.லெட்சுமணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 9**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழுமான்யம் Tied Grant 2021– 22ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்26/2021/ஆ1 நாள் 29.12.2021ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் 2 எண்ணம் Infiltration Well அமைத்தல் | 30.00 | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 4.66% கூடுதல் |
| | | | திரு M.சின்னதம்பி ஒப்பந்தக்காரர் | 6.26% கூடுதல் |
| 2 | ஆய்க்குடி ரோட்டில் அமைந்துள்ள பசுமை உரக்குடில் மையத்தில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 27.40 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 4.68% கூடுதல் |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 6.20% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1 மற்றும் 2 வரையுள்ள பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 10**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழுமான்யம் Tied Grant 2021– 22ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.26/2021/ஆ1 நாள்.29.12.2021ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை FSTP இடத்தில் பொருட்கள் வைப்பறை 8.40x8.60m மற்றும் காவலர் அறை கட்டுதல் | 9.50 | திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 4.60% கூடுதல் |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 5.71% கூடுதல் |
| 2 | தென்காசி நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் MCCல் உரம் சேமிப்பு அறை 1 0.40mx8.60m கட்டுதல். | 9.00 | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.62% கூடுதல் |
| | | | திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 6.08% கூடுதல் |
| 3 | சம்பாத் தெருவில் உள்ள வார்டு அலுவலகத்தில் (அளவு:12.00mx7.00m) BOV மற்றும் LCV வாகன காப்பக கட்டிடம் கட்டுதல் | 9.80 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 4.56% கூடுதல் |
| | | | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 6.02% கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | தினசரி சந்தை அருகில் உள்ள வார்டு அலுவலகத்தில் (அளவு: 10.00mx6.00m) BOV வாகன காப்பக கட்டிடம் கட்டுதல் | 7.30 | திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.64% கூடுதல்<br>5.74% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1 முதல் 4 வரையுள்ள பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் : 11**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு சுகாதார துறைக்கான மான்யம் தேசிய சுகாதார திட்டம் (National Health Mission) 2021-22ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 26/2021/ஆ1 நாள் 29.12.2021ன் படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:2 மங்கம்மாள் சாலை பகுதியில் நகர்ப்புற சுகாதார நல மையம் கட்டுதல் | 25.00 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 4.59% கூடுதல்<br>7.34% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் 4.59% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 12**

தென்காசி நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டிநிதி 2021-22ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்4500/2021/ஆ1 நாள்29.12.2021ன் படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரகள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட களக்கோடி தெரு மற்றும் நகராட்சி காலனி ஆகிய இடங்களில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் பழுது பார்த்து பராமரித்தல் பணி. | 11.60 | திரு S.பிச்சைக்கனி ஒப்பந்தக்காரர்<br>திரு M.சின்னதம்பி ஒப்பந்தக்காரர் | 4.56% கூடுதல்<br>7.10% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் 4.56% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள திருS.பிச்சைக்கனி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 13**

தென்காசி நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு வட்டி நிதி 2021-22ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1082 நாள்.03.12.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 12.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள பொது கழிப்பிடம் பழுது பார்த்து பராமரித்தல் பணி. | 8.00 | திரு S.பிச்சைக்கனி ஒப்பந்தக்காரர்<br>திருC.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 4.64% கூடுதல்<br>6.90% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் 4.64% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள திருS.பிச்சைக்கனி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்

**மன்றப்பொருள் : 14**

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2020 – 21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் **4500/2021/ஆ1**ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 22.04.2022ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளி

கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| | **இரண்டாவதுதவணை** | | | |
| 1 | TNHB காலனி விரிவாக்கம் பகுதியில் உள்ள பூங்காவில் சுற்றுச்சுவர் அமைத்தல், நடைபாதை அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல், கழிவறை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | 28.00 | திரு M.சண்முகவேலு ஒப்பந்தக்காரர்<br>திரு S.ஆறுமுகம் ஒப்பந்தக்காரர் | 4.60% கூடுதல்<br>4.65% கூடுதல் |
| 2 | தெற்கு மாசி வீதியில் தார்தளம் அமைத்தல் | 33.00 | திரு M.சண்முகவேலு ஒப்பந்தக்காரர்<br>திரு S.ஆறுமுகம் ஒப்பந்தக்காரர் | 4.60% கூடுதல்<br>5.03% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1 மற்றும் 2 க்கான பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்

**<u>மன்றப்பொருள் : 15</u>**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி **2022–23**ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் **1** நாள்.17.03.2022ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி **01.04.2022**ம் தேதியன்று ஒப்புதல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு(ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| **1** | ஊர்க்காடு தலைமை நீரூந்து நிலையத்திலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரை உள்ள மின்மோட்டார்களை ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி ( 13 நபர்கள்) | **9.60** | திரு.S.முருகன் ஒப்பந்தக்காரர்<br>திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் | **0.50**ரூ குறைவு<br>**1.47**ரூ அதிகம் |

**அ.கு** **1.** மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.50% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.S.முருகன் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு

வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் : 16**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022–23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்2 நாள்.17.03.2022ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2022ம் தேதியன்று ஒப்புதல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீர்த்தேக்க காவலர் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் காவலர்கள் (3நபர்கள்) பணிபார்த்தல் | 6.30 | திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர்<br><br>திரு.S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.214 ரூ குறைவு<br><br>1.42ரூ அதிகம் |

**அ.கு** 1. மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.214% குறைவான ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 17**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022–23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 3 நாள் 17.03.2022ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2022ம் தேதியன்று ஒப்புதல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிடகூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வால்வு திருப்புனர்கள் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (6 நபர்கள்) பணிபார்த்தல் | 6.30 | திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர்<br><br>திரு.S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.214 ரூ குறைவு<br><br>1.42ரூ அதிகம் |

**அ.கு** 1. மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.214% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி குடிநீர் பணியின் அவசரஅவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 18**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022–23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 10 நாள்.17.03.2020ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 04.04.2022ம் தேதியன்று ஒப்புதல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் மற்றும் குடிநீர் டேங்கர் லாரி ஆகிய வாகனங்களுக்கு ஓட்டுநர் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (2 நபர்கள்) பணிபார்த்தல் | 5.00 | திரு.S.அருணாசலம் ஒப்பந்தக்காரர்<br>திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் | 1.96 ரூ குறைவு<br>5.58ரூ அதிகம் |

**அ.கு** 1. மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.96% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.S.அருணாசலம் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 19**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022–23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 4 நாள்.17.03.2022ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 07.04.2022ம் தேதியன்று ஒப்புதல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிடகூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அடிபம்புகள் பழுது பார்த்தல் | 5.00 | திருM.K.அப்துல்ரசாக் ஒப்பந்தக்காரர்<br>திரு.S.முருகன் ஒப்பந்தக்காரர் | 1.31 ரூ குறைவு<br>5.31ரூ அதிகம் |

**அ.கு** **1.** மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.31% குறைவான ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.M.K.அப்துல்ரசாக் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 27 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 28 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 29 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 30 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 31 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 32 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 33 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | 34 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | 35 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | 36 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 11 | 11 | 37 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | 38 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | 39 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 14 | 14 | 40 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | 41 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | 42 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | 43 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 18 | 18 | 44 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 19 | 19 | 45 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்